# 15. சமய சீர்திருத்த இயக்கம்

*பத்தொன்பதாம் நூற்றாண்டு பாரம்பரியப் பண்பாட்டுக்கு எதிரான இலட்சிய–கலாச்சாரப் போராட்டத்துக்கு சாட்சியாக இருந்தது.*

*– பிபன் சந்திரா.*

## 15.1 இந்து முன்னேற்ற மேம்பாட்டு சங்கம்

### 15.1.1 பத்திரிகைப் பணி

19 ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் தமிழ் நாட்டில் கல்வித் தகுதியுடைய செல்வாக்கு பெற்ற சிலர் இந்து மதத்தை மீட்க முற்பட்டனர். கிறித்துவ சமயப் பிரச்சாரகர்களின் பிரச்சாரத்தாலும், மதமாற்ற முயற்சிகளாலும் தூண்டப்பட்ட இவர்கள் இந்து மதத்தின் பெயரால் எதிர்ப்புக் குரல் கொடுக்கத் துவங்கினர். 1833 இல் துவங்கப்பட்ட **கர்னாடிக் குரோனிகிள்** (Carnatic Chronicle) என்ற ஆங்கிலப் பத்திரிகையும், 1840 இல் ஆரம்பிக்கப்பட்ட **நேட்டிவ் இன்டர்பிரட்டர்** (Native Interpreter) என்ற பத்திரிகையும் பொதுவாக சமுதாய–சமய நிலை பற்றிய செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டனவேயன்றி சர்ச்சைக்குரிய பிரச்சனைகளை விவாதிக்கவில்லை. இந்துக்கள் சார்பாக ஒரு முறையான இயக்கத்தைத் துவங்க சமுதாயத் தலைவர்கள் தயங்கினர்!

### 15.1.2 முதல் முயற்சி

அந்த காலகட்டத்தில் **கசலு லட்சுமணராசு செட்டி** (Gazalu Lakshmanarasu Chetty) என்பவர் 1844 அக்டோபர் மாதம் **நேடிவ் இன்டர்பிரட்டர்** (Native Interpreter) என்ற பத்திரிகையை விலைக்கு வாங்கி, அதற்கு **கிரசெண்ட்** (Crescent) என்று பெயரிட்டு இந்து மதம் சார்பாக அந்த சமயத்தின் அருமை பெருமைகளைப் பற்றி எழுதினார். செய்திகளையும், கட்டுரைகளையும், சீர்திருத்தக் கருத்துக்களையும் வெளியிட்டார். இதுவே இந்துக்களின் சீர்திருத்த இயக்கத்துக்கான முதல் முயற்சியாகும்.

### 15.1.3 இந்து முன்னேற்ற மேம்பாட்டு சங்கம், 1852

#### நோக்கங்கள்

1852 நவம்பர் மாதம் **சீனிவாச பிள்ளை** என்பவர் **இந்து முன்னேற்ற மேம்பாட்டு சங்கம்** (Hindu Progressive Improvement Society) என்ற அமைப்பை உருவாக்கினார். இந்த முன்னேற்ற சங்கம் மூன்று முக்கிய சமுதாய சீர்திருத்தங்களைப் பற்றி எடுத்துரைத்தது: **1) பெண் கல்வி; 2) விதவை மறுமணம்; 3) ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்பாடு.** சீனிவாசபிள்ளை அற நிலையங்களை (Charities) நடத்தி வந்தார். இந்நிலையங்களில் அவருடன் சேர்ந்து பணியாற்றியவர்களும் முன்னேற்ற மேம்பாட்டு சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒத்துழைத்தனர். தமிழ்

நாட்டில் முதல் முறையாக மக்கள் முன்னேற்றத்துக்காக அமைப்புரீதியான சீர்திருத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

### உதய சூரியன், 1853

**1853** ஆம் ஆண்டு ஜூலை மாதம் **வெங்கட ராயுலு** என்ற சமூக சீர்திருத்தவாதி **உதய சூரியன்** (Rising Sun) என்ற பெயரில் ஒரு பத்திரிகையைத் துவங்கினார். அவர் இப்பத்திரிகையில் சமுதாயப் பிரச்சனைகளைப் பற்றி விவாதித்தார். குறிப்பாக **சீர்திருத்த செயல் திட்டங்களுக்கு** உதய சூரியனில் முன்னுரிமை முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது: **1)** தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்காகப் பள்ளிகளைத் துவக்கல்; **2)** தேவையுள்ளோருக்கு உதவித் தொகை கொடுத்தல்; **3)** விதவை மறுமணச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு வற்புறுத்தல்; **4)** இந்துக்களுக்கென **படிப்பகங்களை** (Reading Rooms) ஆரம்பித்தல்; **5)** சென்னையில் ஒரு **இந்து விவாத சங்கத்தை** (Hindu Debating Society)த் துவக்கல். வெங்கடராயுலு நாயுடு மிகுந்த எதிர்பார்ப்புக்கிடையே இந்து சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை **உதய சூரியன்** மூலம் பிரச்சாரம் செய்தார். பிரச்சாரம் செய்வதோடு நின்றுவிடாமல் சில புரட்சிகரமான திட்டங்களையும் நிறைவேற்றினார். நாயுடு இந்து மக்களின் முன்னேற்ற முன்னோடி முயற்சிகளை மேற்கொண்ட மன நிறைவோடு **1863** ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். **வெங்கடரயுலு நாயுடு பின்னர் வந்த சமுதாய சுயமரியாதை இயக்கத்தலைவர்களுக்கு முதல் முயற்சியாளராக (Pioneer)த் திகழ்ந்தார் எனில் மிகையாகாது.**

## 15.2 பிரம்ம சமாஜம், 1864

### 15.2.1 ஸ்ரீதரலு நாயுடு

தமிழ் நாட்டில் **1860**களில் கல்கத்தாவில் **1828** ஆக டு **20** ஆம் நாள் ராஜாராம் மோகன்ராயால் துவக்கப்பட்ட பிரம்மசமாஜம் செயல்படுவது பற்றிய செய்திகள் பரவத் தொடங்கின. பிரம்ம சமாஜத்தின் உயரிய குறிக்கோள்களாலும், சீர்திருத்த செயல் திட்டங்களாலும் பெரிதும் கவரப்பட்ட கடலூரைச் சேர்ந்த ஸ்ரீதரலு நாயுடு அவரது சொத்தை விற்றுவிட்டு, வங்காளம் சென்று, ஓராண்டு காலம் தங்கி, பிரம்மசமாஜம் செயல்படுவதை நேரில் கண்டறிந்தார். சமாஜத் தலைவர்களுடன் உரையாடி தெளிவு பெற்றார். வங்க மொழியையும், சம கிருதத்தையும் கற்றுக் கொண்டார்!

### 15.2.2 சென்னை சமாஜம்

பிரம்ம சமாஜத்தைப் பற்றி நேரடி அனுபவம் பெற்று சென்னை திரும்பிய ஸ்ரீதரலு நாயுடு அவர் அறிந்த புதிய புரட்சிகரமான சமுதாய, சமய சீர்திருத்தக் கருத்துக்களையும், பிரம்ம சமாஜ செயல்திட்டங்களையும் பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்தார். **1864** இல் சென்னை வந்த பிரபல பிரம்ம சமாஜப் பிரமுகர் **கேசப் சந்திரசென்** பல இடங்களுக்குப் பயணம் செய்து சொற்பொழிவாற்றினார்; விவாதக் கூட்டங்களில் பங்கேற்றார்; இந்து சமயத் தலைவர்களுடன் உரையாடினார். இவரது சுற்றுப் பயணத்தின் விளைவாக படித்த இந்துக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டது; அவர்கள் இந்து சமயக் கோட்பாடுகள், நடைமுறைகள் பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர்;

பிரம்ம சமாஜத்தின் குறிக்கோள்களை நிறைவேற்ற முன்வந்தனர். எனினும், கேசப் சந்திரசென் பிரம்ம சமாஜத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான **உருவ வழிபாட்டை உதறித் தள்ள வேண்டும்** என்ற சீர்திருத்தத் திட்டத்தைப் பற்றி பிரச்சாரம் செய்தது சென்னை சனாதன இந்துக்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே, தமிழ் நாட்டில் பிரம்மசமாஜம் வேரூன்றி வளர முடியாமல் போயிற்று.

# 15.3 வேத சமாஜம், 1864

## 15.3.1 சமரச மார்க்கம்

பிரம்ம சமாஜத்தின் புரட்சிகரமான கொள்கைகளுக்கு உடன்பாடு இல்லாத சீர்திருத்தவாத இந்துக்கள் சென்னையில் **வேத சமாஜம்** என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தனர் (1864). வேதசமாஜம் பிரம்ம சமாஜத்தின் திருத்திய மறுமதிப்பு. இந்த அமைப்பு இந்து மத வட்டத்துக்குள் இருந்து கொண்டே பிரம்ம சமாஜத்தின் மிதவாதக் கொள்கைகளை செயல்படுத்த முனைந்தது. அதாவது, வேத சமாஜம் பிரம்ம சமாஜத்துக்கும் இந்து மதத்துக்கும் இடையே ஒரு சமரச மார்க்கத்தை உருவாக்க முற்பட்டது.

## 15.3.2 செயல் திட்டங்கள்

**ஸ்ரீதரலு நாயுடு**வே வேத சமாஜத்துக்குப் பொறுப்பேற்று பிரம்ம சமாஜத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும், திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முற்பட்டார். அதற்கேற்றவாறு வேதசமாஜத்தின் அமைப்பையும், விதிமுறைகளையும் மாற்றி அமைத்தார். ஸ்ரீதரலு நாயுடுவின் தலைமையில் வேதசமாஜம் பல **ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை** நடைமுறைப்படுத்தியது: 1) பிரம்மோ திருமணச் சட்டம் நிறைவேற்றப் பட வேண்டும் என்று இந்திய வைசிராய்க்கு ஒரு விண்ணப்பம் அனுப்பப்பட்டது; 2) தென்னிந்தியாவிலேயே முதல் சடங்குகள் இல்லாத திருமணம் நடத்தி வைக்கப்பட்டது (1871); 3) தென்னிந்தியாவின் பல இடங்களில் வேத சமாஜத்தின் கிளைகள் துவங்கப்பட்டன; 4) பிரம்மசமாஜ இலக்கியம் தமிழிலும், தெலுங்கிலும் மொழி பெயர்க்கப்பட்டது; 5) செல்வாக்கு இழந்திருந்த பத்திரிகையான **தத்துவபோதினி** என்ற தமிழ்ப் பத்திரிகை புதுப்பிக்கப்பட்டது; **இந்தியன் மிர்ரர்** (Indian Mirror) என்ற புதிய பத்திரிகை துவங்கப்பட்டது; 6) விக்கிரக வழிபாடு கூடாது, சமயச் சடங்குகளைத் தவிர்த்தல், சாதிப் பாகுபாடுகளைப் போக்கல், விதவைகள் மறுமணம், தாசி முறை ஒழிப்பு, சகுனத்தடை, பெண் கல்வி, விபச்சார எதிர்ப்பு போன்ற சீர்திருத்தக் கருத்துக்கள் பிரச்சாரம் செய்யப்பட்டன. ஸ்ரீதரலு நாயுடு இந்நடவடிக்கைகளில் பிரதான பங்கேற்றார். இவர் பிரம்ம தீபிகை என்ற மாத இதழை வெளியிட்டார். நாயுடு பிரம்ம தீபிகை, டம்பாச்சாரி விலாசம் ஆகிய இரு நாடகங்களை எழுதி அவற்றின் மூலம் சமுதாய, சமய சீர்திருத்தக் கருத்துக்கள் மக்களை சென்றடைவதற்கான வழிவகுத்தார். வேத சமாஜத்துக்காக வாழ்க்கையின் இறுதி நாட்கள் வரை உழைத்த ஸ்ரீதரலு நாயுடு 1874 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

### 15.3.3 புரட்சி பிராமணர்

**துரைசாமி ஐயங்கார்** ஸ்ரீதரலு நாயுடுவின் வலக்கரமாகச் செயல்பட்டவர். நாயுடுவின் முற்போக்குக் கருத்துக்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளித்தவர். இவர் புரசைவாக்கக் கிளைக்குத் தலைவராக இருந்தார். **சமாஜத்தின் ஒரே தமிழ் நாட்டுப் பிராமணர் இவர்தான்!** துரைசாமி ஐயங்கார் சிறந்த மேடைப் பேச்சாளர்; எழுத்தாளர்; துதி பாடல்களை இயற்றியவர்; தத்துவ போதினியின் பதிப்பாசிரியர். யாவற்றுக்கும் மேலாக, இவர் பகிரங்கமாகப் பூணூலைக் கழற்றி எறிந்தவர்! இவரின் இச்செயலுக்காகப் பழமைவாத பிராமணர்களின் கண்டனத்துக்கு ஆளானார். எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் துரைசாமி ஐயங்கார் தஞ்சாவூர், திருச்சி, பங்களூர், மங்களூர் ஆகிய இடங்களுக்குச் சென்று சீர்திருத்த சொற்பொழிவாற்றினார். ஸ்ரீதரலு நாயுடு, துரைசாமி ஐயங்காரின் மறைவுக்குப் பின்னர் தமிழ் நாட்டில் வேத சமாஜத்துக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

## 15.4 பிரம்மஞான சபை

### 15.4.1 பிரச்சார பயணம்

**1875 நவம்பர் 17 ஆம் நாள் எச்.பி.பிளாவட் கி** என்ற ரஷ்ய அம்மையாரும் (Madame H.P.Blavatsky), **கர்னல் எச்.எ .ஆல்காட்** என்ற அமெரிக்கரும் (Colonel H.S.Olcott) சேர்ந்து அமெரிக்காவில் **நியூயார்க் நகரில்** துவக்கிய அமைப்பே **பிரம்மஞான சபை** (Theosophical Society) ஆகும். இவ்விருவரும் 1878 செப்டம்பர் 17 ஆம் தேதி நியூயார்க்கிலிருந்து புறப்பட்டு 1879 பிப்ரவரி 16 ஆம் நாள் **பம்பாய்** வந்தனர். அதன்பின் அவர்கள் இந்தியாவின் பல இடங்களுக்கும் **பிரச்சாரப் பயணம்** மேற்கொண்டனர்.

பிரச்சாரப் பயணத்தின் போது பிளாவட் கியும், ஆல்கார்டும் 1881 அக்டோபர் மாதம் **தூத்துக்குடிக்கும், திருநெல்வேலிக்கும்** வருகை தந்தனர். அங்கு அவர்கள் வந்த போது பிரம்மஞான சபையின் கிளைகள் செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டனர்! வந்தவர்களுக்கு இந்து சமயத் தலைவர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். கிறித்துவர்கள் எதிர்த்தனர்.

### சென்னையில் சபை

பிளாவட் கியும், ஆல்காட்டும் இந்தியப் பிரச்சாரப் பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை வந்தனர். சென்னையில் 1882 டிசம்பர் மாதம் பிரம்மஞான சபையின் ஆண்டுக் கூட்டத்தை நடத்தினர். சென்னை நகருக்கு தெற்கே அடையார் கடற்கரை ஓரத்தில் நிலத்தை வாங்கி பிரம்மஞான சபையின் சர்வதேச தலைமையகத்தை பம்பாயிலிருந்து சென்னைக்கு மாற்றினர்.

### 15.4.2 சபையின் வளர்ச்சி

அடையாரில் பிரம்மஞான சபையின் தலைமை பீடத்தை அமைத்தபின் பிளாவட் கி அம்மையாரும், ஆல்காட்டும் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை

அதிகரித்து, அதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். இவர்களது முயற்சிக்கு சென்னையில் நல்ல வரவேற்பு இருந்தது. பிளாவட் கி துவங்கியிருந்த (1879) **தியோசொபிட் (Theosophist)** என்ற பத்திரிகை பிரபலமாயிற்று. கல்வித் தகுதி உடைய பிராமணர்கள் பலரும், பிராமணரல்லாதோர் சிலரும் பிரம்மஞான சபையில் சேர்ந்தனர். வர்த்தகர்களும், வியாபாரிகளும், செல்வந்தர்களும் பிரம்மஞான சபைக்குத் தாராளமாக நிதி உதவி செய்தனர்.

## 15.4.3 சபையின் செயல்பாடு

பிரம்மஞான சபையின் **துவக்க நோக்கங்கள்** மூன்று: 1) உலக சகோதரத் துவத்தின் மையமாக செயல்படல்; 2) உலக சமயங்கள், தத்துவங்கள், அறிவியல்கள் ஆகியற்றை ஒப்பிட்டு ஆராய்வது; 3) மனிதரிடையே மறைந்து கிடக்கும் இயற்கை நியதிகளைக் கண்டறிதல். பிளாவட் கி அம்மையார் தன்னை இந்து சமயத்தோடு ஐக்கியப்படுத்திக் கொண்டார். ஆன்மீகத் துறையில் இந்துக்கள் ஐரோப்பியரைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவர்கள் என்று கூறினார். ஆல்காட் இந்தியாவின் **புனித நூல்களின்** பெருமை பற்றியும் சமயம் தேசியத்தை வளர்க்கக் கூடியது என்றும் பிரச்சாரம் செய்தார். இருவரும் இந்து சமயமும், இந்தியாவும் புத்துயிர் பெறுவதில் பேரார்வம் காட்டினர். ஆல்காட் இறந்தபின் (1907) **அன்னிபெசண்ட் (Annie Besant)** என்ற அம்மையார் (1847–1933) பிரம்மஞான சபையின் தலைவரானார். அவரது தலைமையின் கீழ் இந்த சபை மக்கள் செல்வாக்குமிக்க இயக்கமாயிற்று.

பிரம்மஞான சபை இந்து இளைஞரிடையே சம கிருத அறிவைப் பரப்புவதில் ஆர்வம் காட்டியது. பண்டைய இந்துக்களின் சாதனைகள் பட்டியலிடப்பட்டன. **கணபதிராவின்** தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரையின் பேரில் திருவல்லிக்கேணி, மைலாப்பூர், கருப்பு நகர் (Black Town) சென்னை நகர் ஆகிய இடங்களில் **சம கிருதப் பள்ளிகள்** துவங்கப்பட்டன. பின்னர் மதுரை, திருச்சி, பெல்லாரி, நெல்லூர், விஜய நகரம், குண்டூர் ஆகிய நகர்களில் **பிரம்மஞான பள்ளிகள்** ஆரம்பிக்கப் பட்டன. பிரம்மஞான சபைக் கிளைகள் பராமரிக்கப்பட்டன. அடையாரில் ஒரு நூலகம் நிறுவப்பட்டது. அதில் உலக சமய இலக்கியங்கள் இடம் பெற்றன. இங்கு பிரம்மஞான போதகர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பிளாவட் கி அம்மையார் திபெத்தில் 'மகாத்மா'க்களை சந்தித்துவிட்டு சென்னை திரும்பிய பின்னர் மகாத்மா என்ற பெயர் இந்தியாவில் பிரபலமாயிற்று. **பிரம்மஞான சபை இந்து கலாச்சாரத்தையும், சமுதாய சீர்திருத்தத்தின் அவசியத்தையும், அனைத்து துறைகளின் முன்னேற்றத்தையும் வலியுறுத்தியதன் விளைவாக இந்திய தேசியம் துளிர்விட்டு வளர வழிவகுத்தது என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் ஆர்.சத்தியநாதய்யர்.**

## 15.5 மதிப்பீடு

தமிழ் நாட்டில் இந்துக்களின் இயக்கம் வேர்விட்டு வளர்வதற்கான விதையை விதைத்தவர் கசலு லட்சுமணராசு செட்டி ஆவார். சமுதாய சமய சீர்திருத்தம் பற்றிய பத்திரிகைள் நடுநிலை வகித்த போது செட்டி இந்து மதத்தின் சார்பாகக் குரல் எழுப்பினார்.

சீனிவாச பிள்ளை துவக்கிய இந்து முன்னேற்ற மேம்பாட்டு சங்கம் இந்துக்களின் இயக்கத்துக்கு அமைப்பு வடிவம் கொடுத்து இயக்கத்தை முன்கொண்டு சென்றது. பிரம்ம சமாஜமும், வேதசமாஜமும் இந்துக்களின் இயக்க நாணயத்தின் இரு பக்கங்களாக இருந்து இயக்கம் தமிழ் நாட்டில் விரிவடைய உதவி செய்தன. அடையாரில் பிரம்மஞான சபை துவக்கப்பட்டபின் இந்துக்களின் இயக்கம் உச்சகட்டத்தை அடைந்தது. இச்சபை இந்திய தேசியம் வளர்வதற்குக் காரணமாக இருந்தது. அன்னிபெசண்ட் அம்மையார் பிரம்மஞான சபையை அரசியல் இயக்கமாக மாற்றியது தற்காலத் தமிழ் நாட்டு வரலாற்றில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய திருப்பு முனையாகும்.